©
GOVERNMENT OF TAMIL NADU
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 134] CHENNAI, MONDAY, MAY 30, 2016
Vaikasi 17, Thunmugi, Thiruvalluvar Aandu–2047

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES.

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், தேனி மாவட்டம்**

**தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோவில்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு**

*[(ந.க.எண் 21020/12/க்யூ2. உ.இ. (ஊ)]*

**No. VI(2)/67(a)/2016.**

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கோவில்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. பி. குணசேகரன் என்பவர் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்தி முறைகேடு செய்திருப்பது மற்றும் ஊராட்சி நிதியில் பல்வேறு தலைப்புகளின்கீழ் விதிமுறைகளைப் பின்பற்றாமல் செலவினம் மேற்கொண்டு அதன் மூலம் ஊராட்சி நிதிக்கு ரூ. 55,57,394/– இழப்பு ஏற்படுத்தியது ஆகிய காரணங்களுக்காக இவர் தொடர்ந்து ஊராட்சி மன்றத் தலைவராகச் செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதுடன் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார் என்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு (11)—ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி கோவில்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. பி. குணசேகரன் என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)—ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

தேனி,
2016 மே 30.

**திரு. ந. வெங்கடாசலம்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித் தலைவர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU